பதிவாளர் நாயகம் திணைக்களம்

சுற்றறிக்கை இலக்கம்: 03/2001

எனது இல: எம்/10/01/2001.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,

இல. 340, ஆர். ஏ. டி மெல் மாவத்தை,

கொழும்பு 03.

2001 ஜூலை மாதம் 26 ஆம் திகதி.

அனைத்து மேலதிக பதிவாளர் நாயகங்கள்,

மாவட்டப் பதிவாளர்கள் மற்றும்

மேலதிக மாவட்டப் பதிவாளர்கள் ஆகியோருக்கு.

**காலம்கடந்த பிறப்புப் பதிவு மற்றும்**

**உத்தேச வயதுச் சான்றிதழ்களை வழங்குதல்**

காலம்கடந்த பிறப்புப் பதிவுகளை மேற்கொள்வதற்கு தற்போது கோரப்படும் ஆவணங்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும், வாய்மொழி விசாரணைகளின் போது தேவையற்ற சாட்சியாளர்கள் அதிகளவில் அழைக்கப்படுவதாலும், பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, காலம்கடந்த பிறப்புகளை முறையாகப் பதிவு செய்வதில் பொதுமக்களுக்கு ஆர்வம் குறைந்துள்ளதோடு, அதற்குப் பதிலாக போலியான பிறப்புச் சான்றிதழ்களைத் தயாரிக்கும் போக்கு அதிகரித்துள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, காலம்கடந்த பிறப்புகளை முறையாகப் பதிவு செய்ய பொதுமக்களை ஊக்குவிக்கவும், போலிப் பிறப்புச் சான்றிதழ்கள் தயாரிப்பதைத் தவிர்க்கவும், தற்போதுள்ள நடைமுறையை எளிமைப்படுத்துவது அவசியமாகிறது.

02. அதன்படி, காலம்கடந்த பிறப்புப் பதிவு மற்றும் உத்தேச வயதுச் சான்றிதழ் வழங்குதல் தொடர்பாகப் பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

03. பிறப்பு நிகழ்ந்து ஒரு வருடம் கடந்த பின்னர் சமர்ப்பிக்கப்படும் பிரகடனங்கள்.

3:1 பிரகடனங்களை ஏற்றுக்கொள்வது.

காலம்கடந்த பிறப்பினைப் பதிவு செய்வதற்குத் தேவையானவாறு பூரணப்படுத்தப்பட்ட, 24 ஆம் பிரிவின் கீழான பிரகடனத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். அதனுடன் பின்வரும் ஆவணங்களை மாத்திரம் பெற்றுக்கொள்ளுங்கள்:

02 ……….

(I) பிறப்புப் பதிவு செய்யப்படவில்லை என்பதற்கான சான்றிதழ் (தேடுதல் முடிவு).

(II) சம்பந்தப்பட்ட நபரின் சகோதர/சகோதரிகளின் விபரம் (ரோ/0808 படிவத்தைப் பயன்படுத்தவும்).

(III) பெற்றோர் திருமணமானவர்களாக இருந்தால், அவர்களின் திருமணச் சான்றிதழ்.

(IV) நபரின் பிறந்த திகதி மற்றும் இடத்தை உறுதிப்படுத்த பின்வரும் ஆவணங்களில் ஒன்று:

(அ) வைத்தியசாலை பிறப்பு அறிக்கை அல்லது அதன் சான்றளிக்கப்பட்ட பிரதி.

(ஆ) கிராம அலுவலர் அறிக்கை அல்லது அதன் சான்றளிக்கப்பட்ட பிரதி.

(இ) தோட்டப் பிறப்பு அறிக்கை அல்லது அதன் சான்றளிக்கப்பட்ட பிரதி.

(ஈ) பேறுகால தாதியின் பிறப்பு ஆவணத்தின் பிரதி.

(V) மேலே (IV) பிரிவில் கூறப்பட்ட ஆவணங்கள் இல்லையெனில், அதற்குப் பதிலாகப் பின்வருவனவற்றில் ஒன்று:

(அ) பிறப்புத் திகதிக்கு அண்மித்த காலத்தில் தயாரிக்கப்பட்ட ஜாதகம் அல்லது ஓலைச்சுவடி.

(ஆ) சுகாதார அபிவிருத்தி அட்டை.

(இ) திருமுழுக்கு சான்றிதழ்.

(ஈ) முதன்முதலில் பாடசாலையில் சேர்க்கப்பட்டபோது பதியப்பட்ட பதிவேட்டின் சான்றளிக்கப்பட்ட பிரதி.

(உ) மாணவர் அறிக்கையின் பிரதி.

VI) மேலே உள்ள ஆவணங்கள் எதனையும் பெற முடியாவிடின், பிரகடனத்தில் உள்ள விபரங்களை மாத்திரம் உள்ளடக்கி 24 ஆம் பிரிவின் கீழ் ஒரு பிரகடனத்தையும், அதனுடன் (இணைப்பு 01) இன் படி தயாரிக்கப்பட்ட பிரகடனப்படுத்துபவிடம் சத்தியக்கடதாசியையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

3:2 பதிவேடுகளைத் தேடுதல்.

I. பிரகடனத்துடன் மேலே குறிப்பிட்ட ஆவணங்களில் ஒன்றின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், பிறந்த திகதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதிக்கு மாத்திரம் பதிவேடுகளைத் தேடிய முடிவு போதுமானது.

(அ) வைத்தியசாலை பிறப்பு அறிக்கை.

(ஆ) கிராம அலுவலர் பிறப்பு அறிக்கை.

(இ) தோட்ட பிறப்பு அறிக்கை.

II. அவ்வாறு இல்லையெனில், பிறப்புப் பதிவு செய்யப்பட வேண்டிய நபரின் வயது 02 ஆண்டுகளுக்கு மேலாக இருந்தால், பிறந்த திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்கான பதிவேடுகளைத் தேடிய அறிக்கையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

3:3 பரிசோதனை நடத்துதல்.

பிரகடனப் பத்திரத்தை பொறுப்பேற்றவுடன் மிக விரைவில் ஒரு வாய்மொழிப் பரிசோதனையை நடத்துங்கள். அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை மாத்திரம் சாட்சியத்திற்கு அழையுங்கள். சாட்சியம் பெறப்பட வேண்டியது, ”இணைப்பு 02” பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக மாத்திரம் ஆகும்.

I. விடயத்திற்குரியவரின் பெற்றோர் இருப்பின் அவர்கள், அவர்கள் உயிருடன் இல்லையெனில் அல்லது வெளிநாட்டில் இருப்பின், அவர்களின் சகோதரர் அல்லது சகோதரி.

II. பிறப்பைப் பதிவு செய்ய வேண்டிய நபர் (விடயத்திற்குரியவர்).

III. பிரகடனப் பத்திரத்தைச் சமர்ப்பிப்பவர் தாய் அல்லது தந்தை அல்லாத பட்சத்தில், பிரகடனப்படுத்துபவர்.

IV. பிரகடனப் பத்திரத்தைச் சமர்ப்பிப்பவர் தாய் அல்லது தந்தை எனின், பிறப்பு தொடர்பான தகவல்களை அறிந்த நம்பகமான ஒரு நபர்.

குறிப்பு: 1. சாட்சியாளர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு, ஆட் பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய பிறிதொரு ஆவணம் போதுமானது. இதற்காக கிராம உத்தியோகத்தர் அழைப்பு அவசியமில்லை.

2. சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் குறித்து சந்தேகம் இருப்பின் மாத்திரம், அவற்றுடன் தொடர்புடைய மூல ஆவணங்களைப் பரிசோதித்துப் பாருங்கள்.

3:4 பரிந்துரை செய்தல்.

1. சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துமூல மற்றும் வாய்மொழிச் சாட்சியங்களின் ஊடாக பிரகடனப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் உறுதிப்படுத்தப்படுமாயின், பிறப்பைப் பதிவு செய்யப் பரிந்துரை செய்யுங்கள். ("இணைப்பு 02" மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தவும்.)

2. அவ்வாறன்றி, உறுதிப்படுத்தப்பட்ட விடயங்களை மாத்திரம் உள்ளடக்கி உத்தேச வயதுச் சான்றிதழ் ஒன்றை வழங்கப் பரிந்துரை செய்யுங்கள். ("இணைப்பு 03" மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தவும்.)

3:5 அனுமதி பெற ஆவணங்களை வலய அலுவலகத்திற்கு அனுப்புதல்.

பரிசோதனை முடிந்தவுடன் பின்வரும் ஆவணங்களைக் கோப்பாகத் தயாரித்து வலய அலுவலகத்திற்கு அனுப்புங்கள்.

I. பூரணப்படுத்தப்பட்ட இலக்கம் 840 படிவத்தின் இரண்டு பிரதிகள்.
II. பிரகடனப் பத்திரம்.
III. பரிசோதனைக் குறிப்புகள் மற்றும் பரிந்துரை.
IV. பெறப்பட்ட ஆவணங்கள் (பக்கம் 1, பக்கம் 2, பக்கம் 3, .......... என வரிசைப்படுத்தி).

3:6 பிறப்புப் பதிவிற்கு அனுமதி அளித்தல்.

1. பிறப்புப் பதிவு அங்கீகரிக்கப்பட்டால், பிறப்பைப் பதிவு செய்வதற்காக பிரகடனப் பத்திரம் நேரடியாக உரிய பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படும். அது குறித்து பிரகடனப்படுத்துபவருக்கு அறிவிக்கப்படும்.
2. அவ்வாறன்றி, உத்தேச வயதுச் சான்றிதழ் நேரடியாக பிரகடனப்படுத்துபவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

04. பிறப்பு நிகழ்ந்து ஒரு வருடத்திற்குள் சமர்ப்பிக்கப்படும் பிரகடனப் பத்திரங்கள்.

4:1 பிரகடனப் பத்திரத்தை ஏற்றுக்கொள்ளல்.

24 ஆம் பிரிவின் கீழ் பிரகடனப் பத்திரத்துடன் பின்வரும் ஆவணங்களை மாத்திரம் பெற்றுக்கொள்ளுங்கள்.

I. பெற்றோர் திருமணமானவர்கள் எனின், அவர்களின் திருமணச் சான்றிதழ்.
II. விடயத்திற்குரியவரின் பிறந்த திகதி மற்றும் இடத்தை உறுதிப்படுத்தும் பின்வரும் ஆவணங்களில் ஒன்று:

(அ) வைத்தியசாலை பிறப்பு அறிக்கை அல்லது அதன் சான்றளிக்கப்பட்ட பிரதி.

(ஆ) கிராம உத்தியோகத்தரின் பிறப்பு அறிக்கை அல்லது அதன் சான்றளிக்கப்பட்ட பிரதி.

(இ) தோட்டப் பிறப்பு அறிக்கை அல்லது அதன் சான்றளிக்கப்பட்ட பிரதி.

(ஈ) குடும்ப நலச் தாதி வழங்கிய சான்றிதழ்.

4:2 பரிசோதனை நடத்துதல்.

இந்தப் பிரகடனப் பத்திரங்கள் மீது பரிசோதனை நடத்துவது அவசியமில்லை.

4:3 அனுமதி அளித்தல்.

இவ்வாறான பிரகடனப் பத்திரங்களுக்கு மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் மேலதிக மாவட்டப் பதிவாளர்கள் அனுமதி அளிக்க முடியும். அவற்றை வலய அலுவலகங்களுக்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை.

4:4 பதிவு செய்தல்.

அங்கீகரிக்கப்பட்ட பிரகடனப் பத்திரத்தை பிறப்பைப் பதிவு செய்வதற்காக உரிய பிரிவின் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவாளருக்கு அனுப்புங்கள். இலவசமாக வழங்கப்படும் பிரதியை பிரகடனப்படுத்துபவருக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அவருக்கு அறிவுறுத்துங்கள். அது குறித்து பிரகடனப்படுத்துபவருக்கும் அறிவிக்கப்பட வேண்டும். இதற்காக ரோ/422 மாதிரிப் படிவத்தைப் பொருத்தமான முறையில் பயன்படுத்துங்கள்.

05. இச் சுற்றறிக்கையின் ஊடாக எதிர்பார்க்கப்படுவது, பொதுமக்களுக்கு அசௌகரியமாக அமையக்கூடிய காலங்கடந்த பிறப்புப் பதிவு முறையை எளிமைப்படுத்துவதாகும். இதன் காரணமாக இலங்கையின் பிறப்புப் பதிவு முறையின் நம்பகத்தன்மைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது என்பதை விசேடமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

06. இதில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் உடனடியாக அமுலுக்கு வரும்.

(ஒப்பம்)
மிஹிந்து ரத்நாயக்க,
பதிவாளர் நாயகம்.

பிரதிகள்:

1. செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த அமைச்சு. - தகவலுக்காக.
2. அனைத்து வலய உதவிப் பதிவாளர் நாயகங்கள். - தகவலுக்காகவும் மேலதிக நடவடிக்கைகளுக்காகவும்.
3. பிரதான அலுவலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்கள். - தகவலுக்காக.
4. மத்திய ஆவணக் காப்பகத்தின் உதவிப் பதிவாளர் நாயகம். - தகவலுக்காக.

(இணைப்பு 01)

**உத்தேச வயதுச் சான்றிதழைப் பெறுவதற்காகச்**
**சமர்ப்பிக்கப்படும் சத்தியக்கடதாசி**

....................................................................................... வசிக்கும் ............................................................ ஆகிய நான் .................. சமயத்தைச் சேர்ந்தவர் என இத்தால் உண்மையாகவும்/ சத்தியமாகவும் வெளிப்படுத்துகிறேன்.

1. இதில் பிரகடனம் செய்பவர் நானே.
2. எனது/ பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள .................. பெயருடைய விடயதாரர் / பிறந்த திகதி எனக்குத் தெரியும்.
3. நான்/ விடயதாரர் .................. ஆம் ஆண்டில் பிறந்தவர் என்பதையும்.
4. எனது/ விடயதாரரின்/ தாயின் மற்றும் தந்தையின் விபரங்களை நான் அறிவேன்.
5. எனது/ விடயதாரரின் பிறப்பு இதற்கு முன்னர் பதிவு செய்யப்படவில்லை என்பதை நான் உறுதியாக அறிவேன் என்பதையும்.

எனது/ விடயதாரரின் எதிர்கால நன்மைக்காக நான்/ அவர்/ அவள்/ பிறந்த ஆண்டு .......................... எனவும், பிறந்த இடம் ........................... எனவும், ................................ பெயர் ........................... எனவும், தந்தையின் பெயர் ......................... எனவும், தாயின் பெயர் ......................... எனவும், உள்ளடக்கிய உத்தேச வயதுச் சான்றிதழை வழங்குமாறு பதிவாளர் நாயகத்திடம் இத்தால் கேட்டுக்கொள்கிறேன்.

பிரகடனம் செய்பவரின் கையொப்பம்.
(ரூ. 10/- முத்திரை மீது)

.................................... திகதி,
................................................. அன்று என் முன்னிலையில்
கையொப்பமிடப்பட்டது.

.................................................
சமாதான நீதவான்.
(அலுவலக முத்திரை இடவும்)

* தேவையற்ற சொல்லை வெட்டி நீக்கவும்

(இணைப்பு 02)

**காலம்கடந்த பிறப்புப் பதிவை மேற்கொள்வதற்காக அனுப்ப வேண்டிய பரிந்துரை மாதிரி**

01. இதில் பிரகடனம் செய்பவர் ........................................................................... ஆவார்.
(விடயதாரின்/தாய்/தந்தை/பாதுகாவலர்).

02. விசாரணையின் போது பின்வருபவர்கள் சாட்சியமளித்தனர்.
பிரகடனம் செய்பவர்: -
விடயதாரின் பெற்றோர்/பாதுகாவலர்: -
விடயதாரரை பற்றி அறிந்த நபர்: - ..................................................................................
(பெயரைக் குறிப்பிடவும்).

03. விடயதாரர் என் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். அவர்/ அவள் பார்ப்பதற்கு சுமார் ............... வயதுடைய ஆண்/பெண் ஆவார்.

04. விடயதாரரின் பெற்றோர் திருமணமானவர்கள். அவர்களின் திருமணச் சான்றிதழ் ”பி 01” எனச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பெற்றோர் திருமணமாகாதவர்கள், எனினும் தந்தை பிரகடனத்தில் கையொப்பமிட்டுள்ளார்.

05. இக்குடும்பத்தின் குழந்தைகள் .......... பேர். விடயதாரர் .......... வது குழந்தை ஆவார். குழந்தைகளின் பட்டியல் ”பி 02” எனச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

06. விடயதாரரின் பிறந்த திகதி மற்றும் பிறந்த இடம் .................................................... என உறுதிப்படுத்தப்படுகிறது. (ஆவணங்களின் விபரங்களை உள்ளடக்கவும்). இது ”பி 03” எனச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது உண்மையான ஆவணம் என நான் திருப்தியடைகிறேன்.

07. இப்பிறப்பு இதற்கு முன்னர் பதிவு செய்யப்படவில்லை. ......................... பிரிவில், ......................... திகதி முதல் ......................... திகதி வரை பதிவேடுகளைத் தேடிய முடிவு ”பி 04” எனச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

08. பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விபரங்களின் உண்மைத்தன்மை, சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துமூல மற்றும் வாய்மொழிச் சாட்சியங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக நான் திருப்தியடைகிறேன். இப்பிறப்பைப் பதிவு செய்ய நான் பரிந்துரைக்கிறேன்.

கையொப்பம்:

திகதி: -

அலுவலகம்: -

மாவட்டப் பதிவாளர்/ மேலதிக மாவட்டப் பதிவாளர்.
(அலுவலக முத்திரை இடவும்)

(இணைப்பு 03)

**உத்தேச வயதுச் சான்றிதழை வழங்குவதற்கான**

**பரிந்துரை மாதிரி**

01. இதில் பிரகடனம் செய்பவர் ........................................................................................ ஆவார்.

(விடயதாரர்/தாய்/தந்தை/பாதுகாவலர்).

02. விசாரணையின் போது பின்வருபவர்கள் சாட்சியமளித்தனர்.

பிரகடனம் செய்பவர்: -

விடயதாரர்: -

விடயதாரரின் பெற்றோர்/பாதுகாவலர்: -

03. என் முன்னிலையில் ஆஜரான விடயதாரர் சுமார் ................ வயதுடைய ஆண்/பெண் ஆவார்.

04. விடயதாரரின பெற்றோரின் விபரங்கள் ஆவணங்கள்/வாய்மொழிச் சாட்சியங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன/உறுதிப்படுத்தப்படவில்லை.

05. விடயதாரரின் பிறந்த ஆண்டு மற்றும் பிறந்த இடம் .......................................................... என உறுதிப்படுத்தப்படுகிறது. (ஆவணங்களின் விபரங்களை உள்ளடக்கவும்).

06. இப்பிறப்பு இதற்கு முன்னர் பதிவு செய்யப்படவில்லை.

07. ”இணைப்பு 01” பிரகடனத்தின் படி விடயதாரரின் பிறந்த ஆண்டு .......................... எனவும், பிறந்த இடம் ........................... எனவும், ................................ பெயர் ........................... எனவும், தந்தையின் பெயர் ......................... எனவும், தாயின் பெயர் ......................... எனவும், உள்ளடக்கிய உத்தேச வயதுச் சான்றிதழை வழங்க நான் பரிந்துரைக்கிறேன்.

கையொப்பம்:

மாவட்டப் பதிவாளர்/ மேலதிக

மாவட்டப் பதிவாளர்.

(அலுவலக முத்திரை இடவும்)

திகதி: -

அலுவலகம்: -